**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

**மார்ச்/ஏப்ரல்–2025 பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகள்**

**தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்/ மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் செய்தல் & விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்தல்**

**செய்திக்குறிப்பு**

**I. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்/ மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் செய்தல்:**

மார்ச்/ஏப்ரல்–2025 பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் /மதிப்பெண் பட்டியல்கள் **19.05.2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல்** பெற்றுக் கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Notification பகுதியில் சென்று **Hr Sec First year /SSLC Provisional Certificate** என்பதை Click செய்து தங்களது பதிவெண், பிறந்த தேதி ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**II. விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பம் செய்தல்:**

விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் **20 .05.2025 (செவ்வாய்க் கிழமை) காலை 11.00 மணி முதல் 24.05.2025 (சனிக் கிழமை) மாலை 5.00 மணி வரை** விண்ணப்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடத்திற்கும் விடைத்தாளின் நகல் (Copy of the answer script) **பெறுவதற்கான கட்டணம் ரூ.275/–** தேர்வர்கள் விடைத்தாள்களின் நகலிற்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாக செலுத்த வேண்டும்.

**விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்களுக்கு மட்டுமே பின்னர் மறுகூட்டல் / மறுதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்.**

விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் பின்னர் ஊடகங்கள் வாயிலாகவும் மற்றும் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்படும்.

விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்களுக்கு மறுகூட்டல் / மறுமதிப்பீடு செய்திட விண்ணப்பிப்பதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஒம்/-
இயக்குநர்

இடம்: சென்னை-6.
நாள்: 16.05.2025